සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் / Department of Examinations, Sri Lanka

**II ஆம் தர சுங்க பரிசோதகர்களுக்காக நடைபெறும் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை (பழைய பாடத்திட்டம்) - 2016 (II) (2017)**

First Efficiency Bar Examination for Inspectors of Customs Grade II (Old Syllabus) - 2016 (II) (2017)

**(01)** சுங்க சட்டம் மற்றும் நடைமுறைகள்
Customs Law and Procedure

இரண்டு மணித்தியாலங்கள்
Two hours

**ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.

**1.** இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட அல்லது இறக்குமதி தடைசெய்யப்பட்ட பொருட்கள் சம்பந்தமாக சுங்க கட்டளைச் சட்டத்தின் எத்தனையாம் பிரிவுகள் நடைமுறைக்கு வருகின்றன? அவ்வாறான பொருட்கள் சிலவற்றை உதாரணங்களுடன் விளக்குக. *(20 புள்ளிகள்)*

**2.** பொதுமக்கள் தமது தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு வருகை தரும் ஓர் அலுவலக வாசலிலே கடமையாற்றுவதற்கு உம்மை நியமித்திருக்கும் சந்தர்ப்பத்திலே நீர் பொதுமக்களுக்கு சுங்கத்திணைக்களத்தின் நற்பெயரை பாதுகாக்கும் வகையில் எவ்வாறு கடமையாற்றுவீர் என விளக்குக. *(20 புள்ளிகள்)*

**3.** சுங்க பரிசோதகர் ஒருவர் தனது சட்டைப்பை குறிப்பேட்டை சரியான முறையில் பரிபாலிக்கவேண்டிய முறையை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**4.** விமான நிலையத்தின் பல்வேறு இடங்களில் சுங்கபரிசோதகராக கடமையாற்றுவதற்கு உம்மை நியமிக்கமுடியும். விமான நிலையத்தின் பயணிகள் பிரிவிலே உம்மை நியமிக்கக்கூடிய இடங்களைப் பெயரிட்டு அவ்விடங்களில் உமது கடமைகளையும் சுருக்கமாகக் குறிப்பிடுக. *(20 புள்ளிகள்)*

**5.** நீர் துறைமுகத்திலே கடமையிலுள்ளபோது பையொன்றினுள் பல பொருட்களை மறைத்தவாறு கப்பலொன்றிலிருந்து ஒருவர் இறங்குவதை அவதானித்தீர். அவ்வாறான சந்தர்ப்பத்தில் நீர் எவ்வாறு நடந்து கொள்வீர் என விளக்குக. *(20 புள்ளிகள்)*

**6.** (i) கொழும்பு தடுப்பு அலுவலகத்தின் பரிபாலனத்தின் கீழ்வரும் உப தடுப்பு அலுவலகங்களை பெயரிடுக.

(ii) அத்தகைய உபதடுப்பு அலுவலகங்களில் நடைபெறும் செயல்களை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**7.** இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்யும்போது தெரிந்துசெய்யும் சுங்கக்குற்றங்களுக்கு பொருட்களை பறிமுதல் செய்வதற்கு மேலதிகமாக இறக்குமதி அல்லது ஏற்றுமதி செய்பவருக்கு தண்டனை வழங்கப்படமுடியும். இத்தகைய தண்டனை தொடர்பான சுங்கக்கட்டளைச் சட்டத்தின் பிரிவுகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக. *(20 புள்ளிகள்)*

**8.** சுங்கப்பரிசோதகர் ஒருவர் பின்பற்றவேண்டிய நல்லொழுக்கங்களை குறிப்பிட்டு அவைபற்றி விளக்குக. *(20 புள்ளிகள்)*

* * *